



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஈரோடு மாவட்டத்தில் நடைபெறவுள்ள அரசு விழாவில் கலந்துகொள்வதற்காக நேற்று (19.12.2024) ஈரோட்டிற்கு வருகை தந்தபோது, வழிநெடுகிலும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அமைச்சர் சு.முத்துசாமி உள்ளிட்ட கழக முன்னணியினர் உடன் இருந்தார்கள்.

## பாம்பின் நிழலுக்கும் – தாய் மானின்

# அன்புக்கும் உள்ள வேறுபாட்டை சிறுபான்மையினர் புரிந்து கொள்ளவேண்டும்!

## கோவை, பெந்தெகொஸ்தே சபைகள் கிறிஸ்துமஸ் விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**கோவை, டிச.20-**

**கோவை, எஸ்.பி.சி. பெந்தெகொஸ்தே சபைகள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கிறிஸ்துமஸ் பெருவிழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டார்.**

**அப்போது, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளைத் தெரிவித்தார். அப்போது அவர் `சிறுபான்மையின மக்களின் பாதுகாவலனாக தி.மு.கழகமும், நம் திராவிட மாடல் அரசும் என்றும் திகழுமென குறிப்பிட்டு சிறப்புரையாற்றினார்.**

கோவை, கிறிஸ்துமஸ் பெருவிழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

எஸ்.பி.சி. பெந்தகொஸ்தே சபையின் சார்பாக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கிறிஸ்துமஸ் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி, உங்கள் அனைவரோடும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டு வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், நம் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சார்பாகவும், உங்கள் அனைவருக்கும் என் இனிமையான கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு நீங்கள் ஆயிரக்கணக்கானோர் கூடியிருக்கிறீர்கள், கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியில் இருக்கிறீர்கள். எங்கு பார்த்தாலும் நட்சத்திரங்கள் ஜொலித்துக் கொண்டு இருக்கின்றன. வண்ண விளக்குகள் மின்னிக்கொண்டு இருக்கின்றன. எல்லோரின் முகத்திலும் ஒரு மகிழ்ச்சி, சிரிப்பு இருக்கிறது.

### உலகின் மகிழ்ச்சி

ஒட்டுமொத்த உலகையே மகிழ்ச்சியில் ஆழ்த்தக்கூடிய விழா, எதுவென்றால், அது நம் கிறிஸ்துமஸ் விழா மட்டும்தான். அதுவும் கிறிஸ்துமஸ் என்றால், எனக்கு இன்னும் கூடுதல் மகிழ்ச்சி. உங்களுக்குத் தெரியும் நான் படித்தது டான் பாஸ்கோ பள்ளியில். அதன்பிறகு மேல்படிப்புப் படித்தது, லயோலா கல்லூரியில்.

### நானும் கிறிஸ்துவன்

இங்கு பேசும்போதுகூடச் சொன்னார்கள். சென்ற ஆண்டு, ஒரு கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்டுநானும்ஒருகிறிஸ்துவன்தான் என்று பெருமையாகச் சொன்னேன். உடனே, உங்களுக்குத் தெரியும். பல சங்கிகளுக்குப் பயங்கர வயிற்றெரிச்சல். அதை எப்படிச் சொல்லலாம் என்று. நான் இன்றைக்கு மீண்டும் உங்கள் முன்பு சொல்கிறேன். அதைச் சொல்வதில் மிகவும் பெருமைபடுகிறேன். நானும் ஒரு கிறிஸ்துவன்தான்.

நீங்கள் என்னை கிறிஸ்ட்டியன் என்று நினைத்தால், நான் கிறிஸ்ட்டியன், நீங்கள் என்னை முஸ்லிம் என்று நினைத்தால் நான் முஸ்லிம். நீங்கள் என்னை இந்து என்று நினைத்தால், நான் இந்துதான். ஏனென்றால், நான் எல்லோருக்குமே பொதுவானவன்தான். எப்போதுமே அப்படித்தான் இருப்பேன்.

### அன்புதான் முக்கியம்

எல்லா மதங்களுக்குமே அடிப்படை அன்புதான். அதைத்தான் எல்லா மதங்களும் சொல்லிக் கொடுக்கின்றன. எல்லோர் மீதும் அன்பு செலுத்த வேண்டும் என்பதுதான் எல்லா மதங்களும் சொல்லிக் கொடுக்கின்றன. ஆனால், அதே மதத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேட விரும்புபவர்கள்தான் மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்துவார்கள். பரப்புவார்கள்.

வெறுப்பைப் பரப்பக்கூடியவர்கள் எப்போதும் உண்மையைப் பேச மாட்டார்கள். உண்மையைப் பேசி வெறுப்பைப் பரப்ப முடியாது. அதனால்தான் தொடர்ந்து பொய்களையே நம்பி பொய்யை மட்டுமே பரப்பிக்கொண்டு இருக்கிறார்கள்.





### பொய்யை பரப்புவர்கள்

காலையில் எழுந்து சமூக வலைத்தளங்களில் பார்த்தீர்கள் என்றால், பொய்யை பரப்ப ஆரம்பித்தார்கள் என்றால், இரவு தூக்குகின்றவரைக்கும் அவர்கள் பொய்யைப் பரப்புகின்ற வேலையாகவே இருப்பார்கள். அதையே ஒரு கடமையாக எடுத்துச் செய்வார்கள். மதத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேடுபவர்கள்தான், வெறுப்பைப் பரப்புவார்கள் என்று நாம் இன்றுவரை நினைத்துக்கொண்டு இருந்தோம்.

ஆனால், இன்றைக்கு உயர் பொறுப்பில் உள்ளவர்கள். ஏன், சமீபத்தில் ஒரு நீதிபதிகூட மத வெறுப்புக் கருத்துகளைப் பொதுவெளியில் பேசியதை நாம் பார்த்தோம்.

அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர், சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்புக் கருத்துகளை அங்கு பேசுகிறார். இப்படிப்பட்ட ஒரு நீதிபதி அந்தப் பதவியில் இருக்க வேண்டுமா? அப்படி என்று நாம் குரல் கொடுத்தோம்.

### அ.தி.மு.க உறுப்பினர்கள்

அப்படிப்பட்ட நீதிபதி இருக்கும்போது எப்படி அந்த நீதி மன்றத்தில் நியாயம் கிடைக்கும். அதனால், அந்த நீதிபதியை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் கடந்த 13-ஆம் தேதி மாநிலங்களவையில் எம்.பி-க்கள் எல்லாம் ஒரு தீர்மானம் கொண்டு வருகிறார்கள். மிக மூத்த வழக்கறிஞர் கபில்சிபில் காங்கிரஸ் எம்.பி-க்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனைப்பேரும் அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாகக் கையெழுத்துப் போட்டார்கள். ஆனால், அ.தி.மு.க உறுப்பினர்கள் அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாகக் கையெழுத்து போடவே இல்லை.

### கள்ளக்கூட்டணி அ.தி.மு.க– பா.ஜ.க.

அரசியலமைப்புக்கு எதிரான கருத்துகளைப் பேசி இருக்கின்ற ஒரு நீதிபதியைப் பதவியை விட்டு நீக்கும் தீர்மானத்தைக் கூட ஆதரிக்கும் துணிச்சல், அ.தி.மு.க-வுக்கு இல்லை. அந்த அளவிற்கு அவர்கள் பா.ஜ.க.வின் அடிமைகளாகத்தான் இன்றுவரை இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மாநிலங்களின் உரிமைகளை எல்லாம் ஒழித்துக்கட்ட வேண்டும் என்று ஒன்றிய அரசு அதாவது பா.ஜ.க அரசு கொண்டு வந்த `ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டத்திற்கும் அ.தி.மு.க ஆதரவு கொடுத்துக்கொண்டு இருக்கிறது. வெளி வேஷத்துக்காகத்தான் `நாங்கள் பா.ஜ.க. வோடு கூட்டணியில் இல்லை' என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்களே தவிர, உள்ளுக்குள்ளே அ.தி.மு.க.வின் கள்ளக்கூட்டணி இன்றும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. அதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

அதற்குமேல் இன்னொரு உதாரணம். இரண்டு நாட்களுக்கு முன்புஅ.தி.மு.க-வின் பொதுக்குழு நடந்தது. அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் எல்லாம் பார்த்தீர்கள் என்றால், ஒரு தீர்மானம்கூட ஒன்றிய பா.ஜ.க அரசைப் பற்றியோ, அவர்களைக் கண்டித்தோ, அவர்களை வலியுறுத்தியோ ஒரு தீர்மானம்கூடப் போடவில்லை.

இப்படிப்பட்ட அ.தி.மு.க-வைக்கூட இன்னும் ஓரிரு சிறுபான்மை அமைப்புகள் இன்னும் நம்புகிறார்களே என்று நினைக்கும்போதுதான் எனக்கு மிகுந்த கவலையாக இருக்கிறது.

### முத்தமிழறிஞரின் கதை

இதையெல்லாம் பார்க்கும்போது நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு கதை சொல்லி இருக்கிறார். அவரின் வார்த்தைதான் இது. பழைய இலக்கியத்தில் இரண்டு விதமான நிழல்கள் பற்றி ஒரு பாடல் சொல்லி இருக்கிறார். வடமொழியில் இருக்கின்ற காளிதாசரால் எழுதப்பட்ட சகுந்தலம். அதில் ஒரு நிழல்பற்றி அவர் சொல்கிறார்.

ஒரு ஊரில் கடுமையான வறட்சி. ஒரு சொட்டு தண்ணீர்கூட இல்லை. நிலங்கள் எல்லாம் வெடித்துப்போய் இருக்கின்றன. அந்த நிலத்தில் பாம்பு ஒன்று ஊர்ந்து வருகிறது. வெயில் மிகவும் கடுமையாக இருப்பதால், தரை மிகவும் சூடாக இருப்பதால், பாம்பால் தரையில் ஊர்ந்து வர முடியவில்லை. அதனால் அந்தப் பாம்பு தன் தலையையும், உடம்பையும் தூக்கிக்கொண்டு, வெறும் வாலை மட்டும் வைத்துக்கொண்டு மெதுவாக நகர்ந்து வந்துக்கொண்டே இருக்கிறது.

களைப்பால் கொஞ்ச நேரம் அந்தப் பாம்பு நிற்கும்போது, அந்தப் பாம்பின் தலை மற்றும் உடம்பின் நிழல் தரையில் படுகிறது. அந்த நிழலைப் பார்த்த ஒரு தவளை அந்த நிழலில் வந்து நிற்கிறது.

பாம்பு கீழே குனிந்து பார்க்காமல் இருப்பதால், தவளைக்கு இதுவரைக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், பாம்பு கீழே பார்த்தது என்றால், தவளையின் நிலைமை என்னவென்று உங்களுக்குத் தெரியும்.

அடுத்து இன்னொரு கதை கலைஞர் சொல்கிறார். இரண்டாவது நிழல் பற்றித் தமிழ் இலக்கியத்தில் ஒரு பாடல் இருக்கிறது. ஒரு தாய் மானும், குட்டி மானும் பாலைவனத்தில் நடந்து சென்று கொண்டிருக்கிறது. உச்சிவெயில் தாங்க முடியவில்லை. குட்டி மானால் நடக்க முடியவில்லை. அப்போது அந்தத் தாய் மான் நின்றுகொண்டு அதனின் நிழல் ஒரு பக்கம் விழும்போது, தாய் மான் தன் குட்டி மானை, `என் நிழலில் நின்றுகொள்' என்று, ஓய்வெடுத்துக்கொள் என்று அந்தத் தாய் மான் சொன்னது. கொளுத்தும் வெயிலை தான் வாங்கி கொண்டு, குட்டி மானுக்கு நிழல் கொடுத்தது அந்தத் தாய் மான்.

### தாய் மான்

இப்போது இரண்டு நிழல்களைப்பற்றி உங்களிடம் சொல்லி இருக்கிறேன். இதில் முதலில் சொன்ன பாம்பு நிழலில் நிற்கும் தவளையைப் போலத்தான் ஒரு சிலர் அ.தி.மு.க-வை மக்கள் பார்க்கிறார்கள். அந்தப் பாம்பு கொஞ்சம் கீழே குனிந்து பார்த்துவிட்டால், தவளையின் கதை முடிந்துவிட்டது.

ஆனால், தி.மு.க.வை நீங்கள் நம்புவது தாய் மான் நிழலில் குட்டி மான் இளைப்பாறுவதைப்போலத்தான் தி.மு.க-வை நீங்கள் பார்க்கிறீர்கள். இது அன்பால் செய்கின்ற உதவி. இதற்கு ஈடு, இணையே கிடையாது. ஆகவே, இந்தத்தமிழ் மண்ணில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கம் இருக்கின்ற வரை சிறுபான்மை மக்களுக்காக என்றைக்கும் பாதுகாப்பாக இருப்போம் என்ற உறுதியினை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு எனக்கு முன்பு பேசியவர்கள் சில கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். நிச்சயமாக, அடுத்த வருடம், உங்களின் மாநாட்டிற்கு முன்பு அந்தக் கோரிக்கைகள் எல்லாம் முதலமைச்சரிடம் எடுத்துசென்று விளக்கி, அந்தக் கோரிக்கைகளில் எதையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமோ வெகு விரைவில், அதையெல்லாம் நாங்கள் செய்து கொடுப்போம்.

நம் கழக அரசு, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கையை உங்களிடம் கூறிக்கொண்டு, 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நம் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார். 200-க்கும் அதிகமான தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் என்று சொல்லி இருக்கிறார். அதை எந்த நம்பிக்கையில் சொல்லி இருக்கிறார் என்றால், நீங்கள் எல்லாம் எங்கள்கூட இருப்பீர்கள், என்றைக்கும் எங்களுக்கு ஆதரவாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கையோடுதான் எங்கள் தலைவர் சொல்லி இருக்கிறார்.

உங்களுக்கு அரணாக நிற்கும் கழகத்திற்கு நீங்கள் ஆதரவாக என்றைக்கும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இருப்பீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. இன்னும் ஒன்றரை ஆண்டு காலத்தில் சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது எப்போதும் போல இப்போதும் கழகத்திற்கு நீங்கள் பேராதரவை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது கிறிஸ்துமஸ் தின வாழ்த்துகளைக் கூறிக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் செந்தில்பாலாஜி, கோவி. செழியன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் ஐ.ஏ.எஸ்., மாநகர ஆணையர் சிவகுரு பிரபாகரன் ஐ.ஏ.எஸ்., எஸ்.பி.சி பெந்தகொஸ்தே மாமன்றத்தின் மாநிலத் தலைவர்கள் அப்போஸ்தலன் டேவிட் பிரகாசம், சங்கை எடிசன், பாஸ்டர் வெரில் சதீஸ், சங்கை ஜான்சன் பாண்டியன், ஆனந்த், ஜோயல் குலசேகரன், ஞானசேகரன், வின்செண்ட் லூர்து, டேவிட் சூட், சூரி ஸ்டீபன், எஸ்.பி.சி பெந்தகொஸ்தே செயற்குழு உறுப்பினர்கள் ஜான் ஜெயராஜ், பிரெட்ரிக் குணசீலன், ரெக்ஸ் ஏசுராஜ், ஜோசுவா ஜெகநாதன், ஜோசப் பீட்டர் க்ளமண்ட், நத்தானியல், பால்ராஜ் கிருபாகரன், யோகன் ராஜா,

கழகத்தின் செயற்குழு உறுப்பினர் சாமுவேல் செல்லபாண்டியன், கோவை பெந்தகொஸ்தே சபையின் தலைவர்கள் கிராவிட் ஹோம்ஸ், ஜவகர் சாமுவேல், சாம்சன் எட்வர்ட், பீட்டர் பிரகாசம், ஜான்சன் சத்தியநாதன், வசந்த் சத்தியநாதன், பாஸ்டர் ஜெயசீலன், ராஜாதாஸ், ஜெயபால், ஜோசப் மனோஜ், ஜெயகரன், துணை மேயர் வெற்றிச்செல்வன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.